முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1536

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**13.12.2023,** புதன்கிழமை

1. ஓங்கார ஞான சொரூபமே
ஓங்காரக்குடில் படைத்த அரங்கனே
ஓங்காரன் சுப்ரமணியர் யானும்
ஓதிடுவேன் உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
2. ஆசிதனை சோபகிருது தேள் திங்கள்
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 27 ம் நாள், 13.12.2023, புதன்கிழமை)
அரங்கனுக்கு பலம் கூட எடுத்துரைப்பேன்
வாசிவென்ற ஞானியர் படை
வலம் வந்து அரங்கன் உன்னோடு இருக்க
3. இருக்கவே அரங்கன் உன் படைதான்
இந்த உலகத்தில் அற்புதம் நிகழ்த்தும்
கருத்தாக அரங்கனிடம் சரணாகதி கொண்டு
கலியுகத்தில் தீட்சை பெற்ற மக்களெல்லாம்
4. மக்களெல்லாம் ஆறுமுகன் என் ஆசியோடு
மரணம் வெல்லும் மறுமை வெல்லும் சக்தி கூடி
ஆக்கமுடன் அரங்கன் நோக்கமும் அவதார வழியான
அற்புதமான உலகமாற்றத்தை
5. தேக்கமின்றி உலகோர் செய்து முடிப்பர்
தேசமெங்கும் ஞான ஆட்சி படைக்க
நேசமுடன் ஞானப்படைகளாக மாறி
நிலவுலகில் மாற்றம் நிகழ்த்துவர்
6. ஆகவே அரங்கன் வழித் தொடர்ந்து
அகிலத்தார் ஞான வழி வந்தால்போதும்
அற்புதம் உலகில் சடுதி நடக்கும்
ஆற்றல்பட அரங்கனுக்கும் சக்தி கூடி

7. அறிவிப்பேன் எழுந்தமர்ந்து
ஆற்றல்பட உலகமெல்லாம் வலம்வந்து
அரங்கன் பலம் உலகறிய
அற்புதம் சடுதி காணக்கூடும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–